

உரைமுரசு
பதிப்பாசிரியர்
முனைவர் பா.அருள்ஜோதி



# உரைமுரசு


நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

ISBN 978-81-2343-943-3
9 788123 439433
Code No. A4296 ₹ 65.00

Language: Tamil

**Urai Murasu**

Author: **Dr. B. Aruljothi**

First Edition : December, 2019

Copyright : Publisher

No.of Pages : 76

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN. 978 - 81 - 2343 - 943 - 3

Code No. A 4296

**₹ 65.00**

**Branches**

**Ambattur (H.O.)** 044 - 26359906 **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Tanjore** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452 2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 0434-3234387 **Ooty** 0423 2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil**

**உரை முரசு**

பதிப்பாசிரியர் : முனைவர் பா. அருள்ஜோதி

முதல் பதிப்பு : டிசம்பர். 2019

அச்சிட்டோர்: **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.,**

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎: 044-28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

# 1. தமிழுக்குத் தடம் கண்ட தொல்காப்பியம்

-முனைவர் பொ. மா. பழனிசாமி

தமிழ் இலக்கண முதனூல் என்று போற்றப்படும் தொல்காப்பியம் பண்டைத் தமிழ் இலக்கண நூல்களுள் காலத்தால் மிகப் பழமையும் முதன்மையையும் பெற்றது எனலாம்.

தொல்காப்பியம் படைத்த தொல்காப்பியரை எண்ணிப்பார்த்தால் மிகப் பெருமையாக உள்ளது. ஏனெனில் அவர் தம்மினும் முன்னோரை உயர்மொழிப் புலவர், யாப்பறி புலவர், நுணங்குமொழிப் புலவர், நூனவில் புலவர், சொல்லியற் புலவர், தொன்னெறிப் புலவர் என நன்றி பாராட்டுதல் போற்றத்தக்கதாக உள்ளது.

"இன்று நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்களுள் தொல்காப்பியமே தமிழர் வாழ்வின் பலதுறை பற்றி அறிவதற்குத் துணைபுரிவதாகும். இதனைத் தமிழ்ப் புலவர்கள் மட்டுமே தேர்வு கருதிக் கற்று வருகின்றனர். இஃது இலக்கண நூல்தான் என்றாலும், ஏனைய மொழிகளிலுள்ள இலக்கண நூல் போன்றதல்ல; அண்மை நூற்றாண்டில் தோன்றி வளர்ந்து வரும் மொழியாராய்ச்சியும், இலக்கிய ஆராய்ச்சியும், பண்பாட்டுக் கலைகளான உயிரியல், உளவியல், வாழ்வியல் முதலியனவும் தன்னகத்தே கொண்டு இலங்குகின்றது" என்று டாக்டர் சி. இலக்குவனார் குறிப்பிடுவார்

நம் தொல்காப்பியம் தமிழ் மொழியின் இயல்பை உள்ளவாறு ஆராய்ந்து விளக்குவது; பேச்சு வழக்கையும் செய்யுள் வழக்கையும் அடிப்படையாகக் கொண்டிலங்குவது. அதற்குச் சான்றாக விளங்குவன கீழ்க்கண்ட சிறப்புப்பாயிரம் வரிகள் ஆகும்.

> "தமிழ்கூறு நல்லுலகத்து
> வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
> எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி" என்ற

தொல்காப்பியத்தை நாம் மொழி விளக்கவியல் நூலாகவே எடுத்துக்கொள்ளலாம். தொல்காப்பியம், அக்காலத்து மொழி நிலையையும் அதன் முந்திய நிலையையும் ஓரளவு உணர்த்துகிறது.

அதில் பயன்படுத்தப்பட்ட மொழி நூலின் விதிகளை ஒட்டியே பெரிதும் விளங்குவதால் அதனைக்கொண்டு மொழியின் பொதுவியலையும் ஓரளவு அறியமுடிகின்றது

தொல்காப்பியம் மூவாயிரம் ஆண்டுகள் பழமையுடையதாயினும், இன்றும் அதன் ஆட்சி தமிழ்மொழியில் பெரும் பகுதி நிலைத்து நிற்கிறது. தொல்காப்பியர் ஆழ்ந்து சிந்தித்துத் தமிழின் அடிப்படையான இலக்கணக் கூறுகளையெல்லாம், முன்னோர் வழிநின்று, தொகுத்துத் தந்திருப்பதால் தமிழுக்கு நிலைபேறான இலக்கிய இலக்கணக் காப்பு நூலாக விளங்கி வந்திருக்கின்றது.

தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் இடைப்பட்ட காலத்தில் தோன்றி மறைந்திருந்தாலும் இந்நூல் சிதைவு பெறாமல் வழிவழியாகப் போற்றிக் காக்கப்பட்டு இன்று நம் கைக்கு முழுமையாகக் கிடைத்திருப்பதே இதற்குப் பெரும் சான்றாகும்.

தொல்காப்பியத்திற்கு தமிழரின் பழைய வாழ்க்கை மரபுகள், நூல்மரபுகள் யாவற்றையும் பிற்பட்ட காலத்தவர்க்குக் கொண்டு சேர்த்த பெருமை உண்டு. இவ்வகையில் தமிழ் இலக்கியம் இலக்கணம் தமிழர் வாழ்க்கைப் பண்பாடுகள் யாவற்றிலும் கொண்டு செலுத்திய செல்வாக்கு வேறு உலகநூல் எதனினும் காண இயலாது.

தொல்காப்பியர் காலத்தில் 'நூல்' என்றால் அஃது இலக்கண நூல் ஒன்றையே குறிக்கும். தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.

அதில் எழுத்து எனப்படுப

**"அகரம் முதல்**
**னகர இறுவாய், முப்பஃது என்ப**
**சார்ந்து வரல் மரபின் மூன்று அலங்கடையே"** (நூற்பா : 1)

என எழுத்துக்கள், எழுத்துக்களின் வடிவம் தனிநின்ற எழுத்து, சொல்லிடை வரும்போது அவ்வெழுத்தின் நிலை, எழுத்துகளின் உச்சரிப்பு நிலை, சொற்களில் எழுத்துகள் தொடர்ந்து நிற்கும் நிலைகள், சொற்கள் புணரும்போது ஏற்படும் எழுத்து மாற்றங்கள் ஆகியன விளக்கப்படுகின்றன. இவை முறையே நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என 9 வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் சொல் பற்றிய பெரும் பிரிவில் சொற்கள் தொடர்களாக அமையும் முறை, தமிழுக்குச் சிறப்பாக அமையும்

அல்வழி வேற்றுமைத் தொடரிலக்கணம், தனிச்சொற்களின் இலக்கணம் ஆகியவை விளக்கப்படுகின்றன. அதாவது கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என 9 வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது.

மேலும் பொருள் இலக்கணம் இலக்கிய ஆக்கம் பற்றியது. மக்கள் வாழ்வு எங்ஙனம் இலக்கியமாகப் படைக்கப்படுகிறது என்பதே இதில் பேசப்படுகிறது.

"சொல் எனப்படுவ பெயரே, வினை, என்று
ஆயிரண்டு என்ப அறிந்திசினோரே" - நூற்பா : 158

"இடைச்சொல் கிளவியும், உரிச்சொல் கிளவியும்
அவற்று வழி மருங்கின் தோன்றும் என்ப" - நூற்பா : 159

"இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று
அனைத்தே செய்யுள் ஈட்டிச் சொல்லே" - நூற்பா : 397

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (பொருள்: நூற்பா : 190)

என்று வாழ்வியல் உண்மைகளை எதார்த்தமாகப் பதிவு செய்துள்ளார்.

இது தமிழில் மட்டுமே காணப்படும் தனிச்சிறப்புடைய பகுதியாக. அறிஞர்களால் பாராட்டப்படுவது. இதனை அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என 9 வகையாகப் பிரித்துப் பொருள் தந்துள்ளார்.

தொல்காப்பிய இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் தமிழில் பலப்பல இலக்கண நூல்கள் தோன்றின. தமிழ் இலக்கண வரலாறு ஒன்று விரிவாக எழுதக்கூடிய வகையில் தமிழில் இலக்கண நூல்கள் காலந்தோறும் தோன்றின எனலாம்.

முதலாவதாக ஐந்திலக்கண நூல்களைக் குறிப்பிடலாம். அவை முறையே வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் ஆகியன தொல்காப்பிய மரபையே பின்பற்றின.

யாப்பிலக்கணம் சார்ந்து தோன்றியவற்றில் குறிப்பிடத்தக்கவை யாப்பருங்கலமும் யாப்பருங்கலக் காரிகையும் ஆகும். அவிநயம்,

காக்கைபாடினியம் என்பன காலத்தால் முற்பட்டவை. யாப்பிலக்கணம், சிதம்பர செய்யுட்கோவை, பல்சந்தப் பரிமளம், விருத்தப்பாவியல் பிற்காலத்தும் தோன்றிய யாப்பிலக்கண நூல்கள் ஆகும்.

தண்டியலங்காரம், மாறனலங்காரம், அணி இலக்கணம் போலும் தமிழ் அலங்கார நூல்களில் வடமொழிச் செல்வாக்கு மிகுதி எனினும் கூர்ந்து நோக்குவார்க்கு அவற்றிலுள்ள தமிழ் அடிப்படைகளும் தெள்ளிதின் விளங்கும்.

நேமிநாதமும் நன்னூலும் எழுத்து, சொல் பற்றித் தனியே இலக்கணங்கூறுவன. இலக்கணக்கொத்து சொல்லிலக்கணம் பற்றியது. இறையனார் களவியல், நம்பியகப் பொருள், தமிழ்நெறி விளக்கம், களவியற் காரிகை, மாறனகப் பொருள் என்பன அகம் பற்றியும் பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை என்பன புறப்பொருள் பற்றியும் பேசுபவையாகும்.

நன்னூல் தொல்காப்பியத்தின் வழிநூல் என்பது. இதனைப் பழையனவற்றை ஓரளவு கழித்துப் புதிய வழக்குகளைப் புகுத்தித் தன் காலத்து நிலையை விளக்கும் மொழிவிளக்க நூல் எனலாம். நன்னூல் பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் என இரண்டு வகையான பாயிரங்களைக் கொண்டு விளக்குகின்றது.

தமிழில் உள்ள நன்னூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்று இரண்டு அதிகாரங்களை மட்டுமே கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் ஐந்து இயல்கள் உள்ளன. இதனை இயற்றிய பவணந்தி முனிவர் வடமொழியினையொட்டி பதவியல் என ஓர் இயலைப் புகுத்தியுள்ளார். நன்னூல், பிற்காலத்துக் கருத்துகளை ஏற்றுப் புதுவிதிகள் சொல்லுவதைப் பலவிடங்களில் காணலாம்.

தற்போது மேலைநாட்டார் கண்ட மொழியியலை நம் முன்னோர்கள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே கண்டு சிறந்த முடிவுகளைக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு மேற்கண்ட இலக்கண நூல்கள்78 செவ்விய சான்றுகளாக அமைந்துள்ளன.

உலகளவில் தொல்காப்பியத்திற்கு ஈடு சொல்லக்கூடிய அளவிற்கு வேறு சிறந்த மொழியியல் விளக்க நூல் இன்றளவும் பிற மொழியிலில்லை என்று துணிந்து கூறலாம். இன்று பல்கிப் பெருகிவரும் மேலைநாட்டாரின் புதுக்கருத்துகளோடு தொல்காப்பியம் பெரிதும் ஒத்து இயங்குகிறது எனலாம்.

நம் தமிழ்மொழியின் தோற்றம் மிகத் தொன்மையானது; கடற்கோளால் முதற்சங்கம் தோன்றிய குமரிக் கண்டமும், இடைச்சங்கம்

தோன்றிய கபாடபுரமும், கடைச்சங்கம் தோன்றிய மதுரையும் அழிந்தன என நிலவியல் அறிஞர்கள் கூறுவர்.

தென்தமிழாய் பல்லோராலும் இன்றளவும் போற்றப்பட்டு வருகிறது நம் தமிழ்மொழி. தமிழில் பேச்சு வழக்குகள் காலத்திற்கேற்ப மாற்றம் கண்டு வந்தாலும் அடிப்படைத் தமிழ்மொழியானது நிலைபெற்று இருக்கிறது. இனி வரும் எத்துணைக் காலமும் தொல்காப்பியமும் நன்னூலும் தமிழ்மொழிக்கும் தமிழ் இலக்கணத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் அடிப்படையாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.